ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2341/63 - 2023 ජූලි මස 21 වැනි සිකුරාදා - 2023.07.21

*2341/63 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்**

14 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப் பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் (பதில்) திலும் அமுனுகம ஆகிய நான், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் உடன்பாட்டுடன், 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், 2023, மாச்சு மாதம் 28 ஆந் திகதியிடப்பட்ட 2325/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினை, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பின்னிணைப்பு அ இற்கு புதிய பந்தி (xxi) இனை அறிமுகப்படுத்தி மேலும் திருத்துவதற்கு கட்டளையிடுகின்றேன்.*

**திலும் அமுனுகம,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் (பதில்).

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு,
கொழும்பு,
*2023, யூலை 20.*

**பின்னிணைப்பு அ**

(xxi) *அச்சு பூச்சு உற்பத்தி செய்யும் நோக்கத்திற்காக, பதிவுசெய்யப்பட்ட அச்சு பூச்சு உற்பத்தியாளர்களினால் மூலப்பொருட்களாக இறக்குமதி செய்யப்படும், இ. மு. குறியீடு 3903.90.10 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள நீரினை அடிப்படையாகக் கொண்ட ஹோமோ பல்பகுதியங்களும் சக பல்பகுதியங்கள் மற்றும் இ. மு. குறியீடு 3906.90.10 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள நீர்மத்திலான சிதறல்கள் மற்றும் கரைசல், தொழில்துறை அமைச்சின் செயலாளரின் பரிந்துரை மற்றும் இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் பேரில்.*

EOG 07-0228